பக்கங்கள் : ஆறு

Registered as a News paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (27-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 275

# முதலாம் திகதி முதல் சீதன தடைச் சட்டம்!

## மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 27

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மணக்கொடைத் தடைச் சட்டம் [சீதனத் தடைச் சட்டம்] நடைமுறைக்கு வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத் துறையினர் அறிவித்துள்ளனர்.

சமூக சீர்கேட்டை — ஒடுக்கு முறையை — களையும் நன்நோக்குடன் இந்தச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுவதாகவும் நீதி நிர்வாகத் துறையினர் அறிவித்துள்ளனர். மணக்கொடைத் தடைச் சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் வெளியிட்ட நீண்ட அறிக்கையில் தமிழீழ நிர்வாகத் துறையினை தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் உருவாக்கிய நோக்கம், அதன் செயற்பாடுகள் ஆகியவை பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள மற்றைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

எமது சமுதாயத்தினைப் பொறுத்தவரை இன்று மிகவும் தேவையானதாகவுள்ள இச்சட்டம் மணக் கொடைத் தடைச் சட்டம் என்ற தூய

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் அதிரடிப்படை முகாம் மீது அதிரடி

## அதிகாரி உட்பட 8 பேர் பலி

யாழ்ப்பாணம், ஒகஸ்ட். 27

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட எட்டு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து 12 மைல் தொலைவில் பல இராணுவ முகாம்களைக் கொண்ட பாதுகாப்பான பிரதேசத்தில் அமைந்திருந்த அதிரடிப்படை முகாம் மீதே புலிகள் இத்துணிகரத் தாக்குதலை நடத்தினர்

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே அப் பகுதியில் சுமார் மூன்று மணிநேரம் கடும் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலில் பலியானவர்களில் ஐவர் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் ஆவர்.

தாக்குதலில் பலியான முகாம் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் தரத்திலான அதிகாரி விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலிலேயே கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

இச் சம்பவத்தில் பதினொரு படையினர் காயமடைந்தனர். (ஐ-எ-4-6)

# புலிகள் பிரமுகர்களுடன் ஐ.நா. அதிகாரி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக. 27

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் றோலண்ட் ஹட்சன் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சார்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஆராயப்பட்டது.

முன்னதாக ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலை நிலைமையை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# சமாதான சூழல் ஏற்பட்ட பின்பே தீர்வு யோசனையைச் சமர்ப்பிக்குக

## மகாநாயக்க தேரர்கள் அறிக்கை

கொழும்பு, ஒக. 27

பயங்கரவாதம் ஒடுக்கப்பட்டு நாட்டில் சமாதான சூழல் ஏற்படும் வரை அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடாது.

மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தி உள்ளனர்.

அரசாங்கம் வெளியிட்ட தீர்வுத் திட்டம் குறித்து தத்தமது கருத்துக்களை வெளியிடும் வகையில் இந்த விசேட அறிக்கையை அவர்கள் வெளியிட்டனர்.

அரசின் தீர்வு யோசனைகளின் நோக்கம் தனித் தமிழ் ஈழம் ஒன்றை அமைக்கும் நோக்கத்தை தோற்கடிப்பதாக இருக்கவேண்டும் என்றும் தமது அறிக்கையில் மகாநாயக்கர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பலவற்றையும் அவர்கள் அதில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு — கிழக்கில் அரசு தனது கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்ட வேண்டும்.

அத்துடன் சகல சமூகங்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு, பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கும் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டையும், இறைமையையும் பாதுகாப்பதற்கும் இயன்ற நடவடிக்கை

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனை கூட்டணி மகஜர்

கொழும்பு, ஒக. 27

அரசின் தீர்வு யோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் —

தீர்வு யோசனைகளை அடிப்படையாக வைத்து அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் — 'தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மணலாறு பெருஞ்சமரின் முதலாம் மாத நினைவு!

## குடாநாடெங்கும் நாளை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக. 27

கடந்த மாதம் 28 ஆம் திகதி மணலாறில் உள்ள ஐந்து படை முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெருஞ்சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் முதலாம் மாத நினைவு தினம் நாளையாகும்,

இதனையொட்டி வடமராட்சி தென்மராட்சி, வலிகாமம் மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை மாலை 4 மணிக்கு நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த — புதிய பரிணாமத்தைச் சுட்டி நிற்கும் — இப்பெருஞ் சமரில் காவியமான வேங்கைகளை நினைவு கூர்ந்து குடாநாடெங்கும் பல்வேறு நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளன.

இம் மாவீரர்களின் பெற்றோர்கள் நாளை மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெறும் வீரவணக்க நிகழ்வுகளில் கலந்துகொள்வர். [ஐ]

# மன்னாரில் நேற்று பேரணி

யாழ்ப்பாணம், ஒக. 27

அன்றாட அத்தியாவசியப் பொருள்களுக்கான தடை விவசாய உள்ளீடுகளுக்கான தடை ஆகியவற்றைக்கண்டித்து மன்னாரில் பேரணி ஒன்று நடைபெற்றது.

நேற்று மாலை 5 மணிக்கு முருங்கன் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி செம்மன்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முடிவடைந்தது.

சுமார் ஒரு மைல் நீளமான பேரணியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பேரணியின் இறுதியில் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் விவசாய சங்கத் தலைவர் செல்வநாயகம் அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வேம்பிராய் மக்கள் தாம் சேமித்த பணத்தில் ரூ.1 லட்சம் அன்பளிப்பு

புத்தூர் வேம்பிராய் கிராம மக்கள் தமது நாளாந்த வருமானத்தில் சேமித்த பணத்தில் ஒரு லட்சம் ரூபாவை தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு நேற்று அன்பளிப்புச் செய்தனர்.

புத்தூர் வாதரவத்தை ஜன சமூக நிலைய முன்றிலில் நேற்றிரவு நடந்த இந்த நிதி கையளிப்பு நிகழ்வில் மொத்தம் 5 லட்சத்து 53 ஆயிரம் ரூபா சேர்ந்தது.

வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பெரும்பாலான மக்களைக் கொண்டவேம்பிராய் கிராமத்தில் உள்ளவர்கள், நாளாந்தம் தமது வருமானத்தில் சேமித்து கடன் உதவி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கிய நிதியில் இருந்து, அச்சங்கத்தின் செயலாளர் திரு. கதிர்காமநாதன் [செல்வம்] மூலமாக இந்த பணம் விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தியிடம் கையளிக்கப்பட்டது.

மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் அங்கு நடந்த கூட்டத்தில் திரு. செ. தமிழேந்தி. திரு. இராஜன் ஆகியோர் உரையாற்றினர். (இ-3)

## குடும்பத்துக்கு 5 கிலோ மா

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது சங்கப் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மாவை வழங்கிவருகிறது.
(எ-173)

## காசுக் கொடுப்பனவு பெறும் மேலும் 8 பேர் விபரம்

யாழ்ப்பாணம், ஒக. 27
மேலும் எட்டுப் பேருக்கு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்தில் காசுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

நாளை காலை 11 மணிக்கு பின்வருவோர் அடையாள ஆவணங்களுடன் கன்னாதிட்டியில் உள்ள தமிழீழவைப்பகத்துக்கு வந்து காசுக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு நிதித்துறை நடுவப்பணியகம் அறிவித்துள்ளது.

மகேஸ்வரி நாராயண பிள்ளை —ரமணன் தாமரப்பிட்டி, தொல்புரம், சுழிபுரம்.

நாகரட்ணம் நாகலிங்கம்—நிச்சாமம், சங்கானை கிழக்கு, சங்கானை.

மி. தவச்செல்வி அல்லது செல்வி எஸ். துரையப்பா — வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை.

நாகமணி சிதம்பரப்பிள்ளை — துணைவி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

கந்தையா கந்தசாமி — கணேசதாஸ் வீதி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

திரு/திருமதி கனகராஜசிங்கம் — சாந்தி கஜேந்திரா மே/பா கட்டுடை, மானிப்பாய்.

செல்வராணி வீரசிங்கம் — ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.


நாகபூசனி சிவநேசன் — பிரான்சிஸ் மோகன் மே/பா இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.
(இ)

## தேவை

★ தெங்கு கொப்பறா
★ தேங்காய் எண்ணெய்
★ கச்சான் கட்டை எண்ணெய்
★ வேப்பம் விதை
★ தேங்காய் எண்ணெய் ஊற்றும் [OIL Expeller]
என்பன தேவைப்படுகிறது.

"மில்க்வைற்"
525/2, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
[சி-2115]

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வீரவேங்கை முத்தப்பன்
[சரவணமுத்து ஸ்ரீகிரிஸ்ணகுமார்] (கோபி)
[கேணல் கிட்டு படை அணி]

தமிழ்த்தாய் கரங்களில்: 27 — 09 — 1977
தமிழர்தம் மனங்களில்: 14 — 07 — 1995

தாயக மண்ணை மீட்க - தடம்புரண்டு ஓடினாயே
கொடும் பாவியர்களின் - வலையில் சிக்கிடத்தான் சென்றாயோ?
நித்திரையில் இருந்து நீ புலியாக சீறிப் பாய்ந்தனையோ
எதிரியின் வான்படை ஏவி விட்ட - அம்பால்
உன் நெஞ்சை பிளந்தனவா?
நீ சிந்திய இரத்தம் செந்தமிழ் மண்ணைக் காக்க சாய்ந்தனையா
நீ சாய்ந்த இரத்தத்தில் — இன்னும்
ஐந்து பத்தாகி பத்து நூறாகி நூறு ஆயிரம் ஆகி
புலியாக உயிர்ந்தெழுந்து வருவார்கள் - உன்
கனவுகள் நினைவாகி வருமென்று நம்புகிறோம்.

புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது எமது மகன் முத்தப்பனுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். இன்று (27 - 08 - 95) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
தந்தை, தாய், அம்மம்மா,
அக்காமார், அத்தான்மார்,
மருமக்கள்.

50/33, செட்டித்தெரு,
நல்லூர்.
(மணிகும்பான் மேற்கு)
5 ஆம் வட்டாரம்.
[38234]

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக. 27
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவுக்காக தென்மராட்சி, தீவக வலய உதைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நாவற்குழி வவனிதா வி. கழகத்தை எதிர்த்து சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி. கழகம் மோதும்.
(ஐ-117)

★ ★ ★

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் டொனாக்ட் கணேசக்குமார் நினைவுச் சுற்றுக் கேடயத்திற்காக நடத்தி வந்த 50 மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிறிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப்போட்டி இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி போட்டியிடுகிறது. பிரதம விருந்தினராக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர். சி. பத்மநாதன் கலந்து கொள்கிறார்.
(ஒ 20)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 27
வடக்கு கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தில் இணைந்துள்ள விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்படும் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குகொள்ளும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — றோயல் எதிர் கலைவாணி அணி.

★ பிற்பகல் 4 மணி — கொய்யாத்தோட்டம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன்.

★ பிற்பகல் 5 மணி — சென் நிக்கலஸ் எதிர் அரியாலை
(ஐ)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு: 10 - 06 - 1974
வீரச்சாவு! 28 - 07 - 1995

### வீரவேங்கை அஜந்தா
அண்ணாமலை யாழினி / வனிதா
[சரவணை கிழக்கு]

விடியலின் பாதை தேடி
விரைந்திட்ட வேங்கையே
தலைவன் சேனையிலே
தமிழ் அன்னை விலங்கொடிக்க புறப்பட்டு
களமாடி காவிய நாயகியானாய்
இலட்சிய வழியிலே சென்றிட்ட - உன்
கல்லறைக்கு எங்கள் மலரஞ்சலி.

அன்பின் துயருடன்;
அன்பு அப்பா, அம்மா,
ஜேர்மனி அண்ணன்மார்,
தம்பி [போராளி], தங்கை.

இ. அண்ணாமலை,
மயிலப்புளம்,
வேலணை.

"இவருடன் வீரச்சாவு அடைந்த அனைத்து போராளிகளையும் நினைவில் கொள்ளுகின்றோம்."

இவரின் 31 ஆம் நாள் நினைவு தினம் 27-08-95 ஞாயிற்றுக்கிழமை எம்மில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
இ. அண்ணாமலை,
இல. 17, விக்னேஸ்வரப் பிள்ளையார்
கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை.
[38241]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### கனகசபை கருணைப்பிரகாசம்
(தொண்டைமானாறு)
அவர்களின்

பிறப்பு: 17 — 10 — 1926
இறப்பு: 29 — 07 — 1995

வீட்டுக்கிருத்தியம் 28 - 08 - 95 திங்கட்கிழமை 11 மணியளவில் இருபாலை கிழக்கில் உள்ள தற்போதைய இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முகவரி:
ஜெயா காமன்ஸ்,
பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

தற்போதைய முகவரி:
இருபாலை கிழக்கு,
இருபாலை.
[38235]

# BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96

விஞ்ஞானம் – வர்த்தகம் – கலை

(A/L 95 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்க்குரியது)

## DAY CLASS

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி

ஆரம்பம்:- 01 - 0? - 1995

மீட்டல் வகுப்புகள் (சனி, ஞாயிறு)

ஆரம்பம்:- 03 - ?9 - 1995

(8709)

## விசேட ஆங்கில வகுப்பு

- ★ A/L பரீட்சை எடுத்தவர்களுக்கு
- ★ பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு.
- ★ London Exam எடுப்பவர்களுக்கு
- ★ ஆங்கிலத்தில் முன்னனுபவம் இல்லாதவர்களுக்கு பிரத்தியேகமாகக் கற்பிக்கப்படும்.
- ★ தினசரி வகுப்புக்கள்

ஆரம்பம்:- 1 - 9 - 1995

ஆசிரியர்: MR. RAJAGOPAL

SYLLABUS

1. Basic Grammar
2. Exercises
3. Reading Practice
4. Writing Practice
5. Speaking Practice
6 Vocabulary
7. Etiquette

BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

(8707)


# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## அபிரான் தாவீது (தம்பிராசா)

தோற்றம்: 10 – 04 – 1924

மறைவு: 27 – 08 – 1987

அமரர் அபிரான் தாவீது (தம்பிராசா) அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை மன்றாடுகிறோம்.

குடும்பத்தினர்,
அன்பு மனைவி (கத்தறீன்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்மார்.

இல. 56/2. இராசசிங்கம் வீதி,
திருநகர், யாழ்ப்பாணம். (38226)

# புலிகளின் குரல் வானொலியில்

27 – 08 – 1995

ஞாயிறு இரவு

- ★ 8-02 — இசையரங்கம் திரு. மா. ஸ்ரீரங்கநாதன் பாட்டு
- ★ 8-20 — தாயகப்பாடல்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கைமண்" 8 ஆம் அங்கம்

28 – 08 – 1995

திங்கள் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

# தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-03 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — உங்கள் தெரிவு

# ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 27

வலி. கிழக்கு பிரதேசசபையினால் இரண்டு புதிய ஆயுள்வேத வைத்தியசாலைகள் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட உள்ளன.

கோப்பாய் பிரதேசசபை உப அலுவலகத்திலும் சிறுப்பிட்டி கிராமத்திலும் அமைய இருக்கும் இந்த வைத்தியசாலைகளை கோப்பாய் பிரதேச செயலரும் விசேட ஆணையாளருமாகிய திரு. க. கேதீஸ்வரன் திறந்து வைப்பார். (ஒ)

# மற்றும் ஒருவர் கைது

புதுடில்லி, ஓக. 27

வேலூர் சிறையில் இருந்து தப்பிய 43 பேரில் மற்றொருவர் வெள்ளியன்று மேற்கு வங்காள மாநிலத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வங்காள தேசத்திக்குள் நுழைய முயன்ற சமயம் இவர் எல்லைக் காவலர்களால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது (இ-3)

# ஊழியர்கள் தற்காலிக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 27

சங்கானை பிரதேச செயலர் பகுதியிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் வெளிக்கள ஊழியர்கள் சேவை நலன் கருதி வேறு பிரிவுகளுக்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வி. சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

தற்போது இப்பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்துள்ளமையால் இந்த ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# 3-ம் ஆண்டு இதய அஞ்சலி

ஈன்றவள் சரணங்களில்! 13 — 11 — 1920



படைத்தோன் பாதவடிகளில்: 28 — (8 — 1992

## அமரர் மரியாம்பிள்ளை எட்வேட்

அன்பின் பாசக்கயிறறுந்து
ஆண்டு மூன்றாகியதே எம் தலைவா!
சொந்த பந்தப் பற்றறுத்து
பரமனடிசேர்ந்த எம் அருமைத் தந்தையே!
உங்களான்மா சாந்தியுற ஆதியந்தமற்றவனை
அனுதினமும் வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக நாளை திங்களன்று காலை 6-15மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்திலும் காலை 6-00 மணிக்கு அருளாச்சிரமத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் அனைவரும் பங்கு கொண்டுவேண்டுமாறு பரிவன்புடன் கோருகின்றோம்.

நேசக் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலிக்கும்
அன்பு மனையாள், நேசமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

திருமதி ஜே. எட்வேட்,
7, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (38222)

# 45ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



அமரர்

## கதிர்காமர் நாராயணபிள்ளை

(பருத்திக்கலட்டி கன்னாகம்)
(கா. சீ. கூட்டுத்தாபன முன்னைநாள் ஊழியர்)

தோற்றம்: 26 – 02 – 1926

மறைவு: 14 – 07 – 1995

அன்பினால் எம்மை வழி நடத்திய எமது அன்புக்கும், பாசத்திற்குமுரிய குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும், அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறி சகல விதத்திலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நா. ஸ்ரீதரன்
C/o வை. மார்க்கண்டு,
பெரிய மாவடி,
சாவகச்சேரி. (38237)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்புக் கதிரைகள், தகரப் பந்தல், கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தி. கிருஷ்ணராசா, இல.190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (38216)

நெல் உடைக்கும் சோமசிறி, No: 7, இந்தியன் 16 H. P (அணில்) டீசல் என்ஜின் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கரன் அரைக்கும் ஆலை, பொற்பதி வீதி, கோண்டாவில். (38218)

10 அடி அஸ்பெஸ்ரஸ் கூரைத் தகடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரன், புவைரத வீதி, கோண்டாவில். (நிரு கல்வி நிலையத்திற்கு எதிரில்) (38219)

நல்ல பழக்கமுள்ள அல்சேஷன் ஆண் நாயும், நாய்க் குட்டிகளும் விற்பனைக்குண்டு T. K நடேசன், "நந்தினி நந்தவனம்", 15 மலர் மகள்-வீதி, அரியாலை (38232)

Sharp போட்டோஸ்ரற் மெசின்-SF 7750 பைனியர் R 11, நஷனல் RX 5080, கசியோ ஓகன் என்பன விற்பனைக்குண்டு. திபன் போட்டோ, அரசடி வீதி, தாவடி, கொக்குவில். (38236)

நல்ல நிலையில Portable ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் ('Optima', 'Erica', 'Olivetti', 'Underwood' உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வே. செல்வ ஜோதி, நீகன்நகர், 63, வில்லியம் வீதி, நாவாந்துறை. (38196)

புத்தம் புதிய Suntec Solar [Australian] Model St 30 (30W) விற்பனைக்குண்டு. தொடர்பு: 123, மருத்திக்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (இந்து விடுதி முன்பாக) (38188)

### தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள அலுவலக, வீட்டுத் தளபாடங்கள், வாங்குகள், உரல் உட்பட தேவை. அளவு, விலை விவரத்துடன் 31-8-95 வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இல. 830, மே/மா உதயன், யாழ்ப்பாணம். [38203]

புதிய திருமண சேவை நிலையத்துக்கு காலையில் மட்டும் வேலைசெய்யக்கூடிய சிறிய பெரிய எழுத்துக்களை அழகாக எழுதக்கூடிய விகிதர்/செயலர் தேவை. கிளை நிலையத்து இடவசதி தருபவருக்கு சலுகையுண்டு. கிளை கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் பகுதி விரும்பத்தக்கது. 31-8-95க்கு முன்னர் விண்ணப்பிக்கவும், இல. 829, மே/மா உதயன், யாழ்ப்பாணம். [38202)

### மணப்பெண்கள் தேவை

குற்றமுள்ள 34, 37 வயது டென்ரல், 30 வயது சிவில் என்ஜினியர், குற்றமற்ற கொழும்பில் 10,000/- எடுக்கும் 29 வயது மனேஜருக்கும், கிளாக்கிற்கும், 37 வயது எக்கவுண்டனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38209]

சைவபோசன 38 வயது வர்த்தகருக்கும், 30 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 59 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், சைவ போசன பெண்களும், குற்றமற்ற 35 வயது டொக்டருக்கும், 32 வயது டொக்டர் பெண்ணுக்கு டொக்டர், எக்கவுண்டன்ற் மணமகனும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38212]

### மணமகன் தேவை

சைவபோசன குற்றமற்ற 37 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 4இல் நட்புச் செவ்வாய் சைவபோசன 31 வயது [34 கிரகபாவம்] படித்த மணப்பெண்ணுக்கும் பெற்றவர்கள் மணமக்களைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38211]

### மணமகன்மார் தேவை

குற்றமற்ற 25, 28, 32, 38 வயது பட்டதாரி ஆசிரியைகளுக்கும், குற்றமுள்ள 38 வயது பட்டதாரிக்கும், 28, 30 வயது பெண் என்ஜினியருக்கும், சைவ போசன 28, 30, 34 வயது ஆசிரியைகளுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [38210]

### மணமக்கள் தேவை

கனடாவிலுள்ள 46, 43 வயது சகோதரருக்கும், 40 வயது சகோதரிக்கும், இங்குள்ள 32 வயது பொறியியலாளருக்கும், 30 வயது டாக்டர் சகோதரிக்கும் மாற்றாகவோ, தனியாக பெண்களுக்கோ மணமக்கள் தேவை. ஐந்து பேரும் ஒரே குடும்பம் கனடாவிலுள்ளவருக்கு வெளிநாட்டில் உள்ளவர் விரும்பத்தக்கது. இல. 831, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38204)

### கணிதம்-95

துரித மீட்டல், (O/L) வரைபு புள்ளிவிவரவியல், நிகழ்தகவு, தேற்றங்கள், மடக்கை, விருத்திகள், பரப்பளவு, கனவளவு, திரிகோண கணிதம், தனிவட்டி, கூட்டு வட்டி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (38121)

### O/L 95

பரீட்சைக்கான எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடையுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8648]

### புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எமது பயிற்சிகள் மூலம் உங்கள் பிள்ளைகளை பரீட்சையில் வெற்றி பெறச் செய்யுங்கள். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8646)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1975]

### றோணியோ, தட்டச்சு

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறப்பாகச் செய்து தரப்படும். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8647]

### ஆங்கிலக் கல்வி

வீட்டில் வந்து ஆங்கிலம் படிப்பிக்கப்படும். ஆண்டு 11 முதல் கீழ் வகுப்பு வரை, பாடத்தில் குறைவானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். இல. 828, மே/பா உதயன். (38178)

### மாதாந்த பயிற்சி

எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன், செப்ரெம்பர் மாத வெளியீடு: 3, 4, 5 ஆம் ஆண்டுகளுக்கு 3-9-95 அன்றும் 6, 7, 8, 9, 10, O/L 16-9-95 அன்றும் வெளியிடப்படும் 2 ஆம் தவணைக்கான பயிற்சி வினாத்தாள்களை இப்போது பெற்றுக் கொள்ளலாம். BOND, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8706)

### சீயாக்காய்ப் பவுடர்

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்ற நிலையை உணர்ந்து அதனைப் பேணிக் காக்கும் முகமாக சித்த மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காயுடன் மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பவுடரை வாங்கி பாவித்து பலனைப் பெறுவீர்களாக. (சி-1727)

### கணக்கு லிகிதர்

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் தேவை. அனுபவத்திற்கு முன்னுரிமை உண்டு. உடன் விண்ணப்பிக்கவும். இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. [38215]

### மொழி பெயர்ப்பு

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கான மொழி பெயர்ப்பு வேலைகள் செய்து கொடுக்கப்படும். இல. 832, மே/பா உதயன். [38231]

### சனி (வக்கிர) மாற்றம்

இலங்கை ஜென்மராசி கும்பத்தில் (ஏழரைச்) சனி வக்கிரம் அடைவதால் அரசின் அரைகுறைத் தீர்வுத் திட்டங்கள் யாவும் படுதோல்வியைத் தழுவும். சத்தியாவின் சனி மாற்றம் ரூபா 10/- எங்கும் விற்பனையாகிறது. குலசி ரேட்ஸ், கல்வியங்காடு. (8711)

### EXPELLER

கொப்பறாவில் இருந்து எண்ணெய் ஊற்றும் "எக்ஸ்பெல்லர்" இயந்திரம் தேவைப்படுகிறது. "மிக்கைவற்" (C-2111)

### தவறிவிட்டது

25-08-95 அன்று நல்லூர் தீர்த்தக்கேணியடியில் ஒரு கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. அரியம், சுப்பிரமணியம் வீதி, அரியாலை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (38233)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 27

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி மாணவரது பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் நாளையும், நாளை மறுதினமும், மருதனார் மடம் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருஷம் ஆவணித்திங்கள் 12 ஆம் நாள் (28-08-1995) திங்கட்கிழமை காலை 9-27 மணிமுதல் 11-19 வரையுள்ள துலா இலக்கினமும் உத்தரநட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சிவகுமார்** | **சுதா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| த. குமாரசாமி | ச. அருணகிரிநாதர் கேதீஸ்வரம் |
| உரிமையாளர்: | கோணாவளை லேன், |
| த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் | கொக்குவில். |
| 272, நாவலர் வீதி, | |
| யாழ்ப்பாணம். | |

(இரு வீட்டார் அழைப்பு)

[38021]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்கலகரமான யுவ வருடம் ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் இன்று (27 - 08 - 95) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-55 மணி முதல் 12-58 மணிவரையுள்ள பூர நட்சத்திரமும், சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமூகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| திரு. திருமதி சிற்றம்பலம் | | திரு. திருமதி இளையதம்பி |
| அவர்களின் | | அவர்களின் |
| [பன்னாலை – தெல்லிப்பழை] | ★ | [சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி] |
| ஏக புத்திரன் | ✶ | கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | | திருநிறை செல்வி |
| **சிவலிங்கம்** | ✶ | **கலாலோசினி** |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

தெய்வத் திருவருள் துணை கொண்டு பாணிக்கிரகண கன்னிகாதான திருமாங்கல்யம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் திருமணம் [Mappamondo Restaurant Langgass Str. 44, 3012, Bern Switzerland இல் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்!

| | |
|---|---|
| திருமதி சிற்றம்பலம், | திரு. திருமதி ஞானசேகரன், |
| திரு. திருமதி பொன்னையா, | [மணமகளின் சகோதரன்] |
| நாவற்குழி. | புத்தூர். |

[38132]

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## வெளிறும் சாயம்!

தென்னிலங்கையில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் மர்மக் கொலைகளின் பின்னணியில் விசேட அதிரடிப் படையினரே இருந்து வந்துள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பாக இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட இருபது அதிரடிப் படைப்பிரிவைச் சேர்ந்த பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பகுதியின் படைப் பிரிவான, விசேட அதிரடிப் படையினர் கொடூரக் கொலைகளில் ஈடுபட்டமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டால்! நிரூபிக்கப்பட்டால் சந்திரிகா அரசின் சாயம் வெளிறிவிடும்.

விடுதிகளிலும், வீடுகளிலும், ரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களிலும் இருந்து கடத்திச் செல்லப்பட்ட, "கைது" செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களே பட்டினி போடப்பட்டும், வதைக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சடலங்கள் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஆறுகளில் வீசப்பட்டிருந்தன.

கடந்த மூன்று மாதங்களில் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொலை செய்யப்படுபவர்கள் தமிழர்களாக இருப்பதால் கொலைஞர்களைக் கண்டு பிடிப்பதில் அரச இயந்திரம் பெரிதாக அக்கறை காட்டவில்லை. சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற மனித உரிமை இயக்கங்கள் இக்கொலைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியதால் கொலைகள் குறித்த மர்மத்தைத் துலக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது!

ஆனாலும், மர்மக் கொலைகளும் தென்னிலங்கைக்கு ஒன்றும் புதியவை அல்ல. பிரேமதாச காலத்திலிருந்தே, மர்மக் கொலைகளைச் செய்வதற்கு தனியான படைப் பிரிவுகளும், பாதாள உலகங்களும் இயங்கின.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்த புதிதில் சூரியகந்த புதைகுழி தோண்டுதல் போன்றவற்றை முதன்மைப் படுத்தி தனது கையில் எப்போதும் இரத்தக்கறை படிய விடப்போவதில்லை என்ற தொனியில் பிரசாரம் செய்து வந்தது.

ஆனால் இப்போது அரசாங்க இயந்திரத்தின் ஓர் அங்கமான விசேட அதிரடிப் படையே மர்மக் கொலைகளைச் செய்திருக்கிறது என்று தெரியவந்திருக்றது. அரசாங்க அரசியல் அதிகார வட்டத்தின் அனுசரணையும் ஆதரவும் இன்றி இக்கொலைகள் நடந்திருக்கமாட்டா.

அதிரடிப் படையினரின் மர்மக் கொலைகள், ஒரு கட்டத்தில் சிங்களத் தீவிரவாதிகள் தென்னிலங்கை வாழ் தமிழர்களை இனப் படுகொலை செய்வதற்கு தூண்டுதலாக மாறும் சாத்தியம் நிறையவே உண்டு.

வடக்கு - கிழக்கில் போர் என்ற போர்வையில் பகிரங்கலசென்ஸுடன் அப்பாவித் தமிழ் மக்களை முப் படையினரும் கொன்றொழிப்பதற்கு மேலதிகமாக —

தெற்கில் மர்மக் கொலைகள் என்ற இரும்புத்திரைக்குப் பின்னால் தமிழர்களைக் கொல்லும் அரசின் ஆசி பெற்ற திட்டமாக இதனை ஏன் கருதக்கூடாது?

## முதலாம் திகதி முதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்ப் பெயருடன் எதிர் வரும் 01 - 09 - 1995 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

சீதன முறையால் இளம் திருமணங்கள் பூதாகரமான முறையில் பாதிக்கப்படுகின்றது. இம்முறை பெண்களைச் சிறுமைப்படுத்துகின்றது. ஒரு பெரும் சமூக ஒடுக்கு முறையாகவும் அது அமைந்துள்ளது.

சீதன முறையைக் களைவதன் மூலம் சமூகத் தளையைக்களைய முடியும்; சமூகத்தின் விடுதலையையும் ஒருபடி வென்றெடுக்க முடியும்.

இச்சட்டம் 45 பிரிவுகளையுடைய ஐந்து இயல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

### பிரிவுகள்

முதலாவது இயலில் பொதுவான விளக்கங்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாவது இயலில் உடைமைகளைப் பெறுமதி எதிர்பாராமல் கைமாற்றுவது பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. அதில் பெறுமதி எதனையும் பிரதிபலனாக எதிர்பாராமல் சொத்துக்களை நன்கொடையாக மட்டுமே கைமாற்றலாம் என்றும் —

அவ்வாறான கைமாற்றல்கள் நீதிமன்று ஒன்றுக்கு விண்ணப்பித்து அம்மன்றின் ஒப்புகையுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

முறைமன்றானது விண்ணப்பத்தின் மீதான நன்கொடை சுதந்திரமான முறையில் எவ்வித தூண்டுதல், நிர்ப்பந்தம் எதுவும் இன்றிக் கொடுபடவுள்ளதா என ஆராய்ந்த பின்பே தனது அனுமதியை வழங்கும் நீதிமன்று அனுமதி மறுப்பின் எவ்வித நன்கொடையினையும் கொடுக்க முடியாது போன்றதான ஏற்பாடுகள் இவ்வியலில் அடங்கியுள்ளன.

மூன்றாவது இயலில் 14 பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகள் மணக்கொடை கொடுப்பதையும், மணக்கொடை வேண்டுவதையும் குற்றமாகக் கொண்டு அதற்கான தண்டனைகளைப் பற்றி விளக்கியுள்ளது. மணக்கொடை கொடுத்தவராயின் அக்கொடைப் பெறுமதியின் காற்பங்கு குற்றப்பணமும், பெற்றவர் எனில் பெற்ற பெறுமதியில் அரைப் பங்கு குற்றப்பணமும் செலுத்த வேண்டிய தண்டனைக்கு உள்ளாவர். அதனுடன் பெறப்பட்ட மணக்கொடையும் பறிமுதலாகும்.

தமிழீழத்தால் வெளியேறி தமிழீழத்திற்கு வெளியே மணக்கொடைப் பரிமாற்றத்தையும் அதற்கான திருமணத்தை தமிழீழத்தினுள்ளும் செய்து கொண்டால் அத்தகையோரும் இச்சட்டத்தால் மணக்கொடை கொடுத்தமைக்கும் பெற்றமைக்கும் தண்டிக்கப்படக்கூடியோர் என்பதான ஏற்பாடுகளையும்—

அதனுடன் தமிழீழத்தில் ஒருவரும் தமிழீழத்தின் வெளியே ஒருவருமாக இருக்கும் மணம் புரிய உள்ளோர் தம்மிடையே மணக்கொடை பரிமாறுவதைத் தடை செய்யப்படுவதான ஏற்பாடுகளையும்—

வேறு பெயர் கொண்டு மணக்கொடையைப் பரிமாறுவதைத்தடை செய்வதான ஏற்பாடுகளையும்—

மணக்கொடையினைக் கொடுக்கவோ, வாங்கவோ முனைதலையும் தடை செய்யப்படுவதாக ஏற்பாடுகளையும்—

மூன்றாவது இயல் கொண்டதாகக் காணப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து வரும் இயல் 3 [அ] வில்—

மணக்கொடை பெறுவதன் பொருட்டான சித்திரவதை [ஆரஞர்] பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

இது திருமணத்தின் பின் கணவனால் அல்லது அவரது சுற்றத்தாரால் மேற்கொள்ளப்படுவதைப் பற்றிக் குறிப்பிடுவதோடு, அது 5 ஆண்டுகளுக்கு உட்பட்ட சிறையால் தண்டிக்கப்படக் கூடியதொரு செயல் என்றும் குறிப்பிடுகின்றது.

இத்தகைய சித்திரவதைகளே இன்று பல்குடும்பங்கள் பிரிவதற்கு ஏதுவாயுள்ளன என்பதும் வெளிப்படையான ஓர் அம்சமாகும்.

### நன்கொடைக்கு நீதிமன்றின் ஒப்புகை

நான்காம் இயலில் நீதிமன்றின் ஒப்புகை இல்லாமல் நன்கொடை எதனையும்கொடுக்க முடியாது என்பது பிந்திய பிரிவுகளில் அடங்கியுள்ளன. அந்நன்கொடை அல்லது இனாம் என்பவைகளைத் தமிழீழத்தினுள்ளோ அன்றி தமிழீழத்தினை வதிப்பிடமாகக் கொண்டவர்கள் தமிழீழத்திற்கு வெளியிலோ பரிமாறினாலோ அவையும் குற்றமாயே கொள்ளப்படுகின்றன. இக்குற்றத்தினை இழைப்போரும் குறித்துரைக்கப்பட்ட குற்றக்காசினால் தண்டிக்கப்படுவார்கள் என அதன் பிரிவுகள் குறிப்பிடுகின்றன.

இதனைத் தொடர்ந்து அமைந்துள்ள ஐந்தாம் இயலில் பொதுவான சில ஏற்பாடுகள் பற்றி அமைவு செய்யப்பட்டுள்ளது.

நொத்தாரிசுகள் சீதன உறுதி எழுதுவது தண்டிக்கப்படவேண்டியதொரு குற்றம் என அமைவு செய்யும் ஏற்பாடும் நன்கொடை உறுதிகளை நொத்தாரிசுகள் வரையும் போது நீதிமன்று அவ்வாறு எழுதுவதற்கென வழங்கிய ஒப்புகையைப் பெற்ற பின்பே வரையவேண்டும் என்றும் அவ்வாறன்றி வரையும் நன்கொடை உறுதிகள் செல்லுபடியற்றனவாகக்கொள்ளப்படுவதோடு அதனை வரைந்த நொத்தாரிசையும் குற்றப் பொறுப்பாளியாகும் ஏற்பாடுகளும் அமைந்துள்ளன.

அதே போன்றே திருமணத்தரகுத் தொழிலும் சட்டமுரணானதாக்கப் படுவதோடு அத்தொழில் புரிவோர் சிறையினால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதான ஏற்பாடுகளும் அடங்கலாக உள்ளன.

மேலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய தனிப்பட்ட சொத்துகள் பற்றியும் அவற்றை அவரவர் தம்விருப்பப்படி சுதந்திரமாகக் கையாளலாம் என்பதான ஏற்பாடுகளும் அடங்கியுள்ளன.

### மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தலில் மக்களின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது மக்கள் ஒத்துழைப்பு நல்கி இச்சட்டத்திற்கு அமைவாகச் செயற்படுவதனால் அனேகர் தண்டனைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியும் என்பதோடு அவ்வாறு செயற்படுவோர் தமிழீழத்தின் சமூக விடுதலைக்கு உழைக்கும் பங்கை உடையவர்களாயும் பரிணமிப்பார்கள்.

குறிப்பாக இளம் தலைமுறையினர் இதன் பாலுள்ள ஒழுங்குகளை செவ்வையாகக் கடைப்பிடிக்க முன்வரும் போது அது மிகவும் முன்னேற்றகரமானதொரு செயற்பாடாக அமைவதோடு ஏனைய சமூகத்தளைகளையும் உடைப்பதற்கான புதிய பாதை ஒன்றுக்கும் வழிவகுக்கும். முனைப்புடன் செயற்படும், அது சுதந்திரமான தமிழீழத்திற்கு நற்பயன் விளைவிக்கும் ஒரு செயலாகவும் அமையும், இதனால் அனைத்து மக்களும் ஒருங்கேஇதன் கண்பிறளாமல் நின்று ஒத்துழைப்பு நல்குவீர்களாக! — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### ஆட்சி அமைப்பது யார்?

## அரசியல் நெருக்கடி ஆந்திராவில் நீடிப்பு

தெலுங்கு தேசம் கட்சியில் ஏற்பட்ட பெரும் பிளவை அடுத்து ஆந்திரா மாநிலத்தில் அரசியல் நெருக்கடி தொடர்ந்து நீடிக்கிறது.

தெலுங்கு தேசம் கட்சியில் இருந்து பிரிந்து சென்றுள்ள மாநில நிதி அமைச்சரும் முதலமைச்சர் என்.டி. ராமராவின் மருமகனுமான சந்திர பாபு நாயுடு தலைமையிலான 163 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மாநில ஆளுநர் தங்களையே ஆட்சி அமைக்க அழைப்பார் என்று எதிர் பார்த்து ஹோட்டல் ஒன்றில் நேற்றுக் காத்திருந்தனர்.

இதேவேளை — மாநில அரசைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்துமாறு கோரும் மனு ஒன்றை முதலமைச்சர் என்.டி. ராமராவ் நேற்று ஆளுநரிடம் கையளித்தார்.

சந்திரபாபு நாயுடுவை ஆதரிக்கும் 163 உறுப்பினர்களின் கையொப்பங்களையும் சரி பார்த்த சட்டப்பேரவைத் தலைவர் தனது அறிக்கையை ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ளார். (ஐ-க)

## ரயில்களின் பாதுகாப்பு நாடு முழுவதும் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 27

ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

கொழும்பில் இருந்து நீண்ட தூரம் செல்லும் ரயில்கள் அனைத்தும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் கடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்நடவடிக்கையை மேற்கொள்ள ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மலையகத்துக்கான சேவையில் ஈடுபட்ட ரயில் ஒன்றில் வெடி மருந்து கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)


**St. John's College, Jaffna**
**AND**
**Chundikuli Girls' College, Jaffna**

## ADMISSION - 1996

1 பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உள.
ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு

2. அ. விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-95 முதல் 15-09-95 வரை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எக்காரணம் கொண்டும் 15-09-95க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
இ. எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
ஈ. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22-09-95, 22-09-95க்குப் பின் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ பிரதி கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஆண்டு ஒன்றுக்கான படிவத்திற்கு ரூபா 100/- ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு ரூபா 150/- செலுத்தவேண்டும்.

7. வயதெல்லைகள்:
அ. ஆண்டு ஒன்று —
விண்ணப்பதாரி 01-02-90 க்கும் 31-01-91 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆண்டு ஆறு —
விண்ணப்பதாரி 01 - 02 - 85 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

8. பிரவேசப் பரீட்சை:
ஆண்டு ஆறு வகுப்புக்கு 21 - 10 - 95 காலை 8 - 30 மணிக்கு ஆரம்பமாகும்.

9. ஆண்டு 4 முதல் ஆண்டு 10 வரையிலான பரி. யோவான் கல்லூரி மாணவருக்கு இவ்வாண்டு 8ஆம் தவணையிலிருந்து விடுதி வசதிகள் உள.

விண்ணப்பங்கள் 15 - 09 - 95 வரை ஏற்கப்படும்.

— அதிபர்கள்.

(கி-2013)

சிறுப்பிட்டி அருள்மிகு
ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயம்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

காலம்: **28 - 08 - 1995** திங்கள்
காலை 10-00மணி

தேர் அமைப்பு:
விஸ்வபிரம்மஸ்ரீ செ. பாலச்சந்திரன் குழுவினர்
ஸ்ரீகாளிகா சிற்பாலயம்,
புத்தூர்.

## விழா நிகழ்வுகள்

காலை 9-00 அபிஷேகமும், பூசையும்
10-00 வெள்ளோட்டம்
11-00 பாராட்டு விழா

தலைவர்:
திரு. தங்கராசா
[தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர்]

வரவேற்புரை:
க. ஸ்ரீஸ்கந்தராசா

ஆசியுரை:
நல்லை ஆதீனமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள்
[தென்மட்டுவில்]
சிவஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள் [நீர்வேலி]
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக்குருக்கள் [நீர்வேலி]

சிறப்புரை:
திரு. ஆறுதிருமுருகன்
திரு. க. சிவானந்தமூர்த்தி
திரு. சி. சிவசண்முகவடிவேல்

தேர்ஸ்தபதி கலைமாமணி ச. பாலச்சந்திரனுக்கு
ஆசிரியர் திரு. என். எஸ், கந்தையா அவர்கள்
தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிப்பார்

பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பவர்:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

✶ சிறப்புமலர் வெளியீடு
வெளியீட்டுரை: பண்டிதர் ச. சுப்பிரமணியம்
நன்றியுரை: திரு. செ, விகவலிங்கம்
(தேர்த்திருப்பணிச் சபைசெயலாளர்]

அடியார்கள் அனைவரும் விழாவில் கலந்து
அம்மன் அருள் பெற வேண்டுகின்றோம்

தேர்த் திருப்பணிச் சபை,
ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயம். [8705)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 02 – 07 – 1975

வீரச்சாவு: 14 – 07 – 1995

## லெப்டினன்ட் சுரேந்திரன் பாபுஜி
சண்முகராசா ஜெயானந்தராசா

அன்னை விலங்கொடிக்க அன்று எழுந்தவன்
மண்ணை மீட்டிட களம்பல கண்டவன்
புலிப்பாய்ச்சலில் மாற்றான் பகை ஒடிக்க
வேங்கையாய் பாய்ந்தவன் வெற்றியுடன் சென்றவன்
மீண்டு வரவில்லை விதையாய் போனவனே
நீங்காத உன்நினைவால் இதயங்கள் வாடுதப்பா

இன்று இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் சகபோராளிகள், மாவீரர் குடும்பம், உற்றார், உறவினர் யாவரையும் பங்குகொள்ளும்படி வேண்டுகிறோம்.

S. துரைசிங்கம்
[மாமன்]

86/2, அரச்சுனா வீதி.
யாழ்ப்பாணம். [38242]

# முல்லைத்தீவில் படையினர் சூடு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 27

ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார். நேற்று முன்தினம் முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த 5 பிள்ளைகளின் தந்தையான சதாசிவம் சிவராஜா [வயது 47] யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். [இ-13)

# பொருண்மிய கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டி ஆலயச் சூழலில் நடத்தப்பட்டு வந்த பொருண்மியக் கண்காட்சி எதிர்வரும் 31ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், பாடசாலை மாணவர்களின் நலன் கருதியுமே கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**தீர்வு...**
[1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சுத்தைக் கோரி உள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியால் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. [இ)

**சமாதான...**
( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அனைத்தையும் எடுக்கவேண்டும். அரசமைப்பு திருத்தங்களும், மாகாண சபை ஆலோசனைகளும் தனித்தனியாகவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

—இவ்வாறு தமது அறிக்கையில் மகாநாயக்கர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [இ-எ]

**புலிகள்...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவதானித்ததுடன் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தற்போதைய மருத்துவ நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியையும் அவர் சந்தித்து நிலைமைகளை ஆராய்ந்தார். யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளரையும் சந்தித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை இவர் இங்கிருந்து புறப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ-4]

**மன்னாரில்...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களால் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

பேரணியின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அரசியல்துறையைச் சேர்ந்த அமுதன் உரையாற்றினார். அவர் உரையில்

ஸ்ரீலங்கா அரசு போராட்டத்தை பலவீனப்படுத்த பல சூழ்ச்சிகளிலும் முனைந்து கொண்டிருக்கின்றது என்றும் —

அடுத்த கட்டமாக எமது மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களையும், விவசாய உள்ளீடுகளையும் திட்டமிட்டு தடை செய்துள்ளது என்றும் —

எமது மக்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பது, ஜனாதிபதி சந்திரிகா அல்ல எமது தேசியத் தலைவர் தான் என்றும் — குறிப்பிட்டார். (இ-4)

ரொனால்ட் கணேசகுமார்
வெற்றிக் கிண்ணத்திற்கான
# கிரிக்கெட் சுற்றுப் போட்டி - 1995

லாவண்யா ஆதரவில்
சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்
இச்சுற்றின் இறுதியாட்டம்

யாழ். பல்கலைக்கழகம்
எதிர்
ஜொலி ஸ்ரார்ஸ் வி. க.

பிரதம விருந்தினர்:
திரு. செ. பத்மநாதன்
[திட்டப் பணிப்பாளர், கச்சேரி யாழ்ப்பாணம்]

கௌரவ விருந்தினர்:
டாக்டர் ரெஜி சொலமன்
[உரிமையாளர், லாவண்யா யாழ்ப்பாணம்]

இடம்:- யாழ். மத்திய கல்லூரி
காலம்:- 27. 08. 1995 இன்று காலை 9 மணி

விளம்பர அன்பளிப்பு:



லாவண்யா பல், மூக்கு கண்ணாடி அகம்,
175, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ரி. அன் சன்ஸ்,
317, மணிக்கூட்டு வீதி - யாழ்ப்பாணம்.
கிளை - சாவகச்சேரி

(சி/2121]

# மரண அறிவித்தல்கள்

## V. C. நமசிவாயம்
[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் V. C. நமசிவாயம் மாவனெல்லவில் 24 - 08 - 95 இல் காலமானார்.

இவர் சுண்டிக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா - அன்னம் தம்பதியரின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ஜீவகன், மைதிலி, நகுலன், சகாதேவன், மாலதி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி இருகாம்பிகை (கனகமணி), காலஞ்சென்ற நாடகக் கலாமணி V. C. பரமானந்தம், மற்றும் திருமதி தயாநிதி, திருமதி மங்கையர்க்கரசி, V. C. குஞ்சிதபாதம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற நாடகமாமணி, C. கனகையா, மற்றும் சி. சந்திரசேகரி, கே. துரைராசா, திருமதி சரஸ்வதி, திருமதி மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஐ. அருளானந்தம், ரவி ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24 - 08 - 95 இல் கண்டியில் இடம்பெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
V. C. குஞ்சிதபாதம்
[சகோதரர்]

9, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். [38243]

## நடராஜபிள்ளை சண்முகநாதன்

(இளைப்பாறிய பதவி நிலை உத்தியோகத்தர்
சமூநல சேவைத் திணைக்களம், கிளிநொச்சி)

வண்ணார்பண்ணை, கே. கே.எஸ். வீதி, தட்டாதெருச்சந்தியைச் சேர்ந்த நடராஜபிள்ளை சண்முகநாதன் 21-08 – 1995 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை. யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), அன்புக் கணவரும், திவ்யகுமாரன் (பொது சுகாதார பரிசோதகர், கொக்குவில்), மாலினி (சுவிஸ்), தயாபரன் (கொழும்பு), கிருபானந்தன், லோகபாலினி [கனடா], கிருஷ்காந்தன் [மாணவன், விவேகானந்த கல்லூரி, கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகானந்தராணி (ஆசிரியை, யா/ உயரப்புலம் மெ. மி. த. க. பாடசாலை, ஆனைக்கோட்டை), தர்மதேவன் (சுவிஸ்), விக்னேஸ்வரி [கொழும்பு], மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 - 08 - 95 இல் கொழும்பு - 12, 172/5 Hulftsdrop Street இல் அமைந்துள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. திவ்யகுமாரன்
(மகன்)

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. [38228]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.